| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.K.E.கிருஷ்ணதாஸ் (–) 0.01 % குறைவு. | திரு.K.E.கிருஷ்ணதாஸ் (–) 0.01 % குறைவு. |
| 2 | திரு. S.நாகராஜ் (+) 1.85% அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/5290/2019)**

**தீர்மானம் எண்: 1436 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**35.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**33**, நொண்டிமேடு பகுதியில் பாதாளச் சாக்கடை பைப்லைன் மற்றும் மேன்ஹோல் இல்லாததால் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வரும் கழிவு நீரை நகராட்சி நடைபாதையில் விடுகின்றனர். இதனால் பொது மக்கள் நடைபாதையை பயன்படுத்த முடியாமலும் மேலும் கழிவு நீரானது நடைபாதையில் தேக்குவதால் நோய் தொற்றும் அபாயமும் ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட நொண்டிமேடு பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை மற்றும் பைப்லைன் அமைப்பது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.50/–** இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட தொகையை குடிநீர் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5292/2019)**

**தீர்மானம் எண்: 1437 அனுமதி வழங்கப்பட்டது.**

**36.** நகராட்சிக்கு சொந்தமான பார்சன்ஸ் வேலி நீர்தேக்கத்தில் இருந்து நகர் பகுதிக்கு 1 MGD திட்டம், 2 MGD திட்டம் ஆகிய **2** திட்டத்தின் கீழ் நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது பருவ மழை பொய்த்து வருவதால் அனைத்து மக்களுக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். என்றும் மற்றும் அக்குடிநீரில் போதிய அளவ குளோரினேசன் செய்து விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று ஆய்வு கூட்டங்களிலில தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நீர்தேக்கத்திற்கு குளோரின் (liquid chlorine) விநியோகம் மற்றும் **6** மாதகாலத்திற்கும் சேர்த்து தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டு தொகை ரூ.**14,00,000/–** க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5291/2019)**

**தீர்மானம் எண்: 1438 அனுமதி வழங்கப்பட்டது.**

**37.** **1.** இவ்வலுவலக கடிதம் வாயிலாக நாள். **29/06/2017.**

**2.** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.டி**8/10393/2017**

நாள்.**21/07/2017.**

**3.** இவ்வலுவலக கடிதம் வாயிலாக நாள். **27/05/2019.**

பார்வை காணும் **1, 2** மற்றும் **3** கடிதங்கள் வாயிலாக அரசு தோட்டக்கலைத் துறைக்கு கடிதம் அனுப்பியதில் பூங்காவில் நகராட்சி சார்ப்பில் துப்புறவு பணியாளர்களை அனுப்பியதற்கு தொகை கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டது. மேலும், ந.க.எண். தி**8/3365/2015**, நாாள.**17/04/2015**, தோட்டக்கலை இனை இணக்குநர் உதகை அவர்களின் கடிதத்தில், இப்பணிக்கு **2001** வருடம் முதல் **2008** ம் வருடம் வரை **1/3** பாகம் தொகை ரூ.**16.16** லட்சம் தொகை செலுத்த வேண்டும் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. தோட்டக்கலை துறை இணை இயக்குநர் தொகை செலுத்த முடியாது என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும், கடந்த **2013, 2014, 2015, 2016, 2017, 2018** மற்றும் **2019** ஆண்டுகளுக்கு தொகை செலுத்த

வேண்டியுள்ளது. கீழ்க்கண்டவாறு ஆண்டு வரியான தொகை வசூல் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

தோட்டகலை துறை ஆண்டு வரியாக செலுத்த வேண்டிய தொகை.

2013 – ரூ.1,50,000/–
2014 – ரூ.1,50,000/–
2015 – ரூ.1,50,000/–
2016 – ரூ.1,50,000/–
2017 – ரூ. 2,40,000/–
2018 – ரூ.85, 440/–
2019 – ரூ.6,00,000/–

------------

மொத்தம் = ரூ.15,25,440/–

------------

**அலுவலக குறிப்பு:–**

**மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும்..**
**(ந.க.எண்.H2/8242/2018)**

**தீர்மானம் எண்: 1439 பதிவு செய்யப்பட்டது.**

**38** மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் ஆணையாளர் மற்றும் நகர் நல அலுவலரின் அறிவுரையின் படியும் நீலகிரி மாவட்ட மலைகளின் அரசியாக திகழ்கின்றது உதகை நகரம் சுற்றுலா நகரமாக விலங்குகிறது. அதில் தினமும் சுற்றுலா பயணிகள் 50,000/–ற்கும் மேற்படி சுற்றுலா வாசிகள் வந்து செல்வின்றனர். மேலும் அப்பொழுது முக்கி பிரமுகர்கள், மிக முக்கிய பிரமுகர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். மேலும் அரசு தாவரவியல் பூங்காவில் மற்றும் அரசு விழாக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளதாலும் சுகாதார பணிகள் மேற்படுத்தப்பட்ட வேண்டி உள்ளதால் போதிய துப்புற பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் சுகாதார பணிகள் தொய்வு இல்லாமல் இருக்கவும் மற்றும் எதிர்வரும் 17/05/2019 முதல் 21/05/2019 வரை 5 (ஐந்து) தினங்களுக்கு மலர்கள் காட்சி நடைபெற உள்ளதால் மலர்கண் காட்சி முன்னிட்டு கார்டன் உட்புறம், வெளிபுறம் சுகாதார பணிகள் மேற்கொள்ளவும். மேலும் துப்புறவு பணியாளர்களை தற்காலிகமாக 50 (ஐம்பது) நபர்கள் ஆள்சப்ளை மூலமாக துப்புறவு பணியாளர்களை சப்ளை செய்ய, நகராட்சியில் தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் ஆள்சப்ளை செய்து வரும் திருவாளர்.ஸ்டார் காண்டர்டர் உதகை ஒப்பந்தாருக்கு எதிர்வரும் 10/05/2019 முதல் 29/05/2019 வரை 20 (இருபது) தினங்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மூலம் துப்புறவு பணியாளர்களை ஆள் சப்ளை செய்ய மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் மற்றும் இப்பணியை மேற்கொண்டு இதற்கான தோராய செலவினம் ரூ.6,00,000/– (ஆறு லட்சம்) வருவாய் நிதிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.H2/8242/2018)**

**தீர்மானம் எண்: 1440 அனுமதி வழங்கப்பட்டது.**

**39.** நகராட்சியில் பழுதடைந்து பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள வாகனங்களை கழிவு செய்து கீழ்கண்ட வாகனங்களை பொது ஏலம் விட தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண். | வாகனத்தின் விபரம் வகை. | வாகனத்தின் பதிவு எண். |
|---|---|---|
| 1 | பெரிய லாரிகள் | TN 43 B 2687<br>TN 43 B 2688<br>TN 43 9883 |
| 2 | ஈப்பு வாகனம் | TN 43 8010 |

**அலுவலக குறிப்பு:–**

**A) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 2652/2018/தி2 நாள்.12.07.2018 அன்று கடிதத்தில் தெரிவித்துள்ள உபயோக மன்ற பழுதடைந்த மற்றும் சாலை பதிவு சான்றிதழ் இல்லாத பழைய வாகனங்கள் மேற்கண்ட பட்டியல் உள்ளவைகளை கழிவு செய்ய அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.H2/24760/2018)**

**தீர்மானம் எண்: 1441 அனுமதி வழங்கப்பட்டது.**

**40.** இந்நகராட்சிக்கு சொந்ததான பகுதிகளில் உள்ள 5 கட்டண கழிப்பிடங்களுக்கு 28.06.2019 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ATC சாலையில் உள்ள கட்டண கழிப்பிடம் (நம்ம டாய்லட்) த்திற்கு கீழ்கண்டவாறு ஏலதாரர்கள் பங்கேற்றனர்.

| வ.எண் | ஏலதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | திரு.K.ராஜா<br>த/பெ.குமார்,<br>9E, அரிசன காலனி, எல்க்ஹில்<br>உதகை. | ரூ.1,04,500/– |
| 2. | திரு.ராமசாமி,<br>த/பெ.செல்லப்பன் ராமசாமி,<br>307, குமரன் நகர், எல்க்ஹில்,<br>உதகை. | ரூ.1,05,000/– |
| 3. | திரு.R.V.சதீஷ்,<br>ரோஸ் மவுண்ட்,<br>காந்தல், | ரூ.1,04,000/– |

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்./911/2019)**

**தீர்மானம் எண்: 1442 அனுமதி வழங்கப்பட்டது.**

**41.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட சுற்றுலா பயணிகள் செல்லும் முக்கிய சாலைகளில் ADB light கள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த light களுக்கு பதிக்கப்பட்ட Cable கள் சாலையின் ஓரத்தில் உள்ள மண் மேடுகளை அகற்ற JCB இயந்திரம் பயன்படுத்தி வேலை செய்யும் போது 16 mm UG Cable சேதமடைவதுடன் ADB light pole ல் உள்ள 16 tmps MCB, 4 way connector ஆகியவையும் சேதமடைந்து விடுகின்றனர். மேலும் மழை மற்றும் குளிர் காலங்களில் ADB light Pole ல் உள்ள 16 mm Cable leg Joints, 25 mm Ferrules ஆகியவை பழுதடைந்து எரிவதில்லை, இதனால் இச்சாலை வழியாக செல்லும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் இரவு நேரங்களில் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட ADB light ற்கு தேவையான உதிரிப் பாகங்கள் வாங்கி பொருத்தி இந்த light யை தொடர்ந்து ஏரிய வைக்க வேண்டியது அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.30/— இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (பொது நிதி)

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3880/2019)**

**தீர்மானம் எண்: 1443 அனுமதி வழங்கப்பட்டது.**

**42.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3 பாரஸ்ட் கேட் அருகில் அணிக் கொரை செல்லும் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான கிணற்றில் இருந்து தோனி பங்களா சாமியார் லைன் ராஜிவ் காலனி ஆகிய பகுதிகளுக்கு 15 HP மோட்டார் மூலம் தண்ணீர் இறைந்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த 15 HP மோட்டார் பழுதடைந்து உள்ளதால் மேற்கண்ட பகுதிதிளுக்கு தண்ணீர் சீராக வழங்க முடியயத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் குடிநீர் இன்றி மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட கிணற்றில் உள்ள 15 HP நீர் மூழ்கி மோட்டாரை வெளியில் எடுத்து அதனை பழுது நீக்கி மீண்டும் கிணற்றில் இறக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டுத் தொகை ரூ.0.63/— இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (குடிநீர் நிதி)

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3871/2019)**

**தீர்மானம் எண்: 1444 அனுமதி வழங்கப்பட்டது.**

**43.** இந்நகராட்சியில் 01—09—2018 முதல் 25—06—2019 வரை அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்ட கீழ்கண்ட செலவினங்களுக்கு நகர் மன்ற பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | செலவு விபரம் | தொகை |
|---|---|---|
| 273 | கணக்கெடுப்பு கட்டணம் கோடப்பமந்து சேனல் | 30,000/— |
| 274 | 2018 கோடை விழா முன்னிட்டு தற்காலிக கழிப்பறை அமைத்தல் | 54,208/— |
| 275 | 2018 கோடை விழாவிற்காக கழிப்பறை தகவலுக்காக Flex board அச்சிடுதல் | 51,912/— |

| | | |
|---|---|---|
| 276 | எம்.ஜீ.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புகைப்படம் எழுத்தல் மற்றும் அச்சிடுதல் | 17,600/– |
| 277 | முநில கணக்காயரகதிற்காக பொறியியல் பிரிவில் இருந்து அளவு புத்தகம், ஜெராஸ், அச்செடுக்க, புகைப்படம் மற்றும் புத்தகம் பிணைப்பு செய்தல் | 15,974/– |
| 278 | MCC விளக்கக்காட்சிக்காக புகைபடம் அச்சிட்டு, A3, A4, புத்தகம் பிணைப்பு செய்தல். | 30,172/– |
| 279 | பேரழிவு மேலாண்மை கையேடுகள் தயாரித்தல் | 13,000/– |
| 280 | மார்லிமந்து சாலை அருகே இணைப்பு வேலை செய்தல் | 18,59,143/– |
| 281 | கெஸட்டில் வெளியிடப்பட்ட ஆபத்தான மற்றும் தாக்குதல் வர்தக உரிம விகிதம் திருத்தப்பட்ட வீதத்தை நோக்கி | 33,600/– |
| 282 | TN 43 J 3769 வாகனத்திற்கான பழுது கட்டணங்களை நோக்கி | 10,572/– |
| 283 | சாந்தி விஜயா பள்ளி வளாகத்தில் கொட்டபட்டதை வெளிப்படுத்தியது | 3,58,369/– |
| 284 | 30 நாட்களுக்கு பொது சுகாதார அவுட்சோர்சிங் | 3,42,600/– |
| 285 | குழாய் வழங்கல் for சேதமடைந்த குழாய் at பார்சன் பள்ளத்தாக்கு | 88,282/– |
| 286 | தோட்டத்தில் பெண்கள் தின 8/3/18 கொண்டாட்டத்திற்கு நீர் வழங்கல் வசதியை வழங்குதல் | 11,990/– |
| 287 | நீலகிரி மாவட்டத்தின் 150 வது ஆண்டு கொண்டடாட்த்திற்கான ஏற்பாடுகள் மற்றும் ப்ரீக்ஸ் பள்ளியில் மரம் நடவு ஏற்பாடுகள் | 37,000/– |
| 288 | 2017–2018 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையை நோக்கி அச்சுப்பொறிகள் மற்றும் பை விளக்கப்படம் தயாரித்தல் மற்றும் பைண்டிங் கட்டணங்கள் | 65,000/– |
| 289 | “மகிழ்ச்சியான சாலை” செயல்பாட்டிற்கான மேடை ஏற்பாடுகளை நோக்கி | 14,800/– |
| 290 | தமிழ்நாட்டின் கௌரவ ஆளுநரின் வருகைக்கான ஆடியோ ஏற்பாடு செய்தல் | 66,200/– |
| 291 | சேரிங்கிராஸ் சாலையில் உள்ள அலங்கார விளக்குகளை சரி செய்தல் | 83,000/– |

| | | |
|---|---|---|
| 292 | எட்டின் சாலையில் உள்ள சேனலை வெளியேற்றியது | 1,41,842/– |
| 293 | ரேஸ் கோர்ஸ் கட்டத்தை பிரித்தல் மற்றும் சமன் செய்தல் | 1,00,924/– |
| 294 | மினி பூங்கா அருகே குழாய்கள் சரிசெய்தல் வரிதிரை அறை ஷட்டர் மற்றும் மின் ஏற்பாடுகள் செய்தல் | 1,95,760/– |
| 295 | வார்டு எண்.5ல் உள்ள அம்பேத்கர் காலனியில் குழாய் மூலம் HDPE தொட்டி வழங்கல் மற்றும் சரி செய்தல் | 27,291/– |
| 296 | ரோஜா தோட்டப் பகுதியில் புதிய நீர் வழங்கல் விநியோக பிரதான வழியை வழங்குதல் | 1,90,000/– |
| 297 | உதகமண்டலம் நகராட்சியில் தேர்தல் காட்சி பலூன் பற்றிய விழிப்புணர்வு செய்தல் | 1,32,986/– |
| 298 | கோடப்பமந்து சானலில் இருந்து மினி பூங்கா வரை அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பூமியை அகற்றுவதற்கான டிப்பரின் ஈடுபாடு செலவு | 10,00,000/– |

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.பி4/6920/2016)**

**தீர்மானம் எண்: 1445 பதிவு செய்யப்பட்டது.**

**44.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ATC சதுக்க மைதானத்தில் எதிர் வரும் ஆகஸ்ட் 15, 2019 அன்று "சுதந்திர தின விழா" கொண்டாட உள்ளதால் இவ்வளாகத்தில் உள்ள கட்டிடம், சுற்று சுவர், கேட் ஆகியவற்றிற்கு வர்ணம் பூசி புதுப்பிக்கவும், அலங்கார பொருட்கள், பேனர், கொடி, நாற்காலி ஆகியவற்றை வாங்கி விழா நடத்துவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.50,000/– க்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**பொது நிதி**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5624/2019)**

**தீர்மானம் எண்: 1446 அனுமதி வழங்கப்பட்டது.**

**45.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது அதிக அளவிலான காற்று மற்றும் மழை காரணமாக அடிக்கடி பார்சன்ஸ் வேலி நீர் தேக்கத்திற்கு செல்லும் வழியில் மரங்கள் மற்றும் கிளைகள் விழுவதன் காரணமாக மின் இணைப்புகள் அடிக்கடி துண்டிக்கப்படுவதால் நகர் பகுதிக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. தற்பொழுது 2 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் நகர் பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்நகராட்சி சுற்றுலாத் தலமாக உள்ளதால் பொது கழிப்பிடங்களுக்கு தினமும் தண்ணீர்

வழங்க வேண்டியுள்ளது. அரசு மருத்துவமனை, அரசு சேட் மருத்துவமனை, அம்மா உணவகம் அரசு மருத்துவமனை அருகில், அம்மா உணவகம் பஸ்நிலையம், பொதுக் கழிப்பிடங்கள் ATC , Town Bus Stand Bus Stnad, Blue Mountail மற்றும் லிபர்ட்டி பொதுக் கழிப்பிடம் ஆகியவற்றிற்கு தினமும் குடிநீர் வழங்க வேண்டி மேலும் கவர்னர் மாளிகை, கலெக்டர் குடியிருப்பு, Judge குடியிருப்பு மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் குடிநீர் பொது மக்களுக்கு வழங்க இயலாத சூழ்நிலையில் ஆங்காங்கே நகர் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களுக்கு தனியார் லாரி வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு பணி மேற் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**குடிநீர் மற்றும் வடிகால் நிதி.**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5625/2019)**

**தீர்மானம் எண்: 1447 அனுமதி வழங்கப்பட்டது.**

**46.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் **19/06/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வ.எண். 1ல் பேருந்து நிலையம் முதல் பீமன் இல்லம் வரை கான்கிரீட் நடைபாதை அமைக்கும் பணி. | **4.80** |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.K.E.கிருஷ்ணதாஸ் (–) 0.02 % குறைவு. | திரு.K.E.கிருஷ்ணதாஸ் (–) 0.02 % குறைவு. |
| 2 | திரு. S.நாகராஜ் (+) 1.84 % அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/4163/2019)**

**தீர்மானம் எண்: 1448 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**47.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் **19/06/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | பார்சன்ஸ் வேலி 1 MGD, 2 MGD பம்ப் ரூம் கூரைகள் மற்றும் கட்டிடம் பராமரிக்கும் பணி. | **9.95** |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.S.R.நந்தகுமார்<br>(–) 0.48 % குறைவு. | திரு.S.R.நந்தகுமார்<br>(–) 0.48 % குறைவு. |
| 2 | திரு. S.R. ரவிக்குமார்<br>(+) 0.19 % அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/1150/2019)**

**தீர்மானம் எண்: 1449 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**48.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் 19/06/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண். 09 கெல்சோ லைன் நடைபாதை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி. | **2.60** |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு. S.R. ரவிக்குமார்<br>(+) 0.05 % குறைவு. | திரு. S.R. ரவிக்குமார்<br>(+) 0.05 % அதிகம். |
| 2 | திரு.S.R.நந்தகுமார்<br>(–) 0.30 % அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/1259/2019)**

**தீர்மானம் எண்: 1450 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**49.** இந்நகராட்கிக்கு உட்பட்ட வார்டு எண்.8, மிஷ்னரி ஹில் பகுதியில் ரேசன் கடை அருகில் உள்ள தார் சாலை ஆனது மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் மோசமாக குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் இச்சாலை வழியாக இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சென்று வரமுடியாமல் மிகவும் சிரம்மமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் ரேசன் கடை அருகில் உள்ள தார் சாலையில் மோசமான இடங்களில் Paver block கற்கள் கொண்டு சாலையை சீரமைப்பது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5329/2019)**

**தீர்மானம் எண்: 1451 அனுமதி வழங்கப்பட்டது.**

**50.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எட்டின்ஸ் சாலையில் இரண்டு மற்றும் மூன்று சாலைகள் சந்திக்கும் பகுதிகளில் அதிக அளவில் மழைநீரினால் அடிக்கடி சாலைகள் பழுது ஏற்பட்டு மிகவும் குழிகளாக காணப்படுகிறது. இதனால் பள்ளி குழந்தைகள், பொது மக்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், தார் சாலைகளிலுள்ள குழிகளில் மழைநீர் தேங்குவதால் உடனே விழும் வாய்ப்புள்ளது மற்றும் வாகனங்கள் விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. எனவே சேரிங்கிராஸ், அலங்கார் தியேட்டர் பழுது மற்றும் ATC ஜங்ஷன் ஆகிய பகுதிகள் பேவர் பிளாக் கற்கள் கொண்டு சாலையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**பொது நிதி.**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5655/2019)**

**தீர்மானம் எண்: 1452 அனுமதி வழங்கப்பட்டது.**

**51.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்ச் ஹில் பகுதியில் ஒயிட் ஹவுஸ் முதல் மாருது காட்டேஜ் குடியிருப்பு சாலை சந்திப்பு வரை புதை வடிகால் குழாய்கள் மற்றும் தொட்டிகள் முழுவதும் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் பாதாள சாக்கடை குழாய்களில் செல்ல வழியில்லாமல் தார் சாலையில் செல்கிறது. பாதாள சாக்கடை குழாய்கள் ஆங்காங்கே உடைந்தும் சில இடங்களில் குழாய்கள் இறங்கியும் உள்ளது. மேற்கண்ட சாலையில் கழிவுநீர் செல்வதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுவதோடு பொதுமக்கள், பள்ளி குழந்தைகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தாயரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,95,000/—க்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.இ5/5654/2019)**

**தீர்மானம் எண்: 1453 அனுமதி வழங்கப்பட்டது.**

**52.** இந்நகராட்சிக்ட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களில் குப்பை தொட்டிகளை சுற்றிலும், மழைநீர் வடிகால், சிறுபாலங்களில் மண் அடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே தண்ணீர் செல்லாமல் தேங்கி உள்ளது. மண் அடைப்பு ஏற்பட்டுள்ளதனை அகற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படி இப்பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள போதிய வாகனங்கள் இல்லாததால் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பயன்படுத்தி மண்களை அகற்றும் பணிக்கு திருவாளர்.குளோபல் எண்விராய்ண்மென்ட் சிஸ்டம், அவர்கள் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ. 4.85 இலட்சத்திற்கு GST வரி 12% தொகை ரூ.58200/—ஐ வழங்க கோரியுள்ளீர்கள். எனவே ரூ.58200/— ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.குளோபல் எண்விராய்ண்மென்ட் சிஸ்டம், அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.இ5/08608/2018—19)**

**தீர்மானம் எண்: 1454 அனுமதி வழங்கப்பட்டது.**

**53.** உதகமண்டலம் நகராட்சியின் 2017—2018ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**
**(ந.க.எண்.சி1/4656/2019)**

**தீர்மானம் எண்: 1455 ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**54.** உதகமண்டலம் நகராட்சியின் 2018—2019ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்காவும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**
**(ந.க.எண்.சி1/4711/2019)**

**தீர்மானம் எண்: 1456 ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**55.** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க. 410 எண். 6203/2019 நாள்.24–05–2019ல் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு 2019–2020ம் ஆண்டிற்கான நகராட்சி பங்கு தொகை ரூ. 2500/–ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2019–2020ம் ஆண்டிற்கான நகராட்சி பங்கு தொகை ரூ.2500/– ஐ இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு செலுத்த மன்றத்திதின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.சி1/1350/2019)**

**தீர்மானம் எண்: 1457 அனுமதி வழங்கப்பட்டது.**

**56.** திரு. நந்தகுமார் ஒப்பந்ததாரர் அவர்கள் செலுத்திய முன் வைப்புத் தொகை 1 % திரும்ப கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும், தொகை ரூ.2600/– காலங்கடந்த வைப்புக்கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரருக்கு காரங்கடந்த வை.. கணக்கில் இருந்து ரூ. 2600/– திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3551/2019)**

**தீர்மானம் எண்: 1458 அனுமதி வழங்கப்பட்டது.**

**57.** திரு. முரளி குமார் ஒப்பந்ததாரர் அவர்கள் செலுத்திய முன்வைப்பு தொகை 1 % திரும்ப கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும் முன் வைப்புத் தொகை ரூ. 8682/– காலங்கடந்த வைப்பு கணக்கிலிருந்து தொகை ரூ.8682/– ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ1/3549/2019)**

**தீர்மானம் எண்: 1459 அனுமதி வழங்கப்பட்டது.**

**58.** திரு. S.R.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் அவர்கள் செலுத்திய முன் வைப்புத் தொகை 1 % திரும்பகேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும், ரூ. 46657/– காலங்கடந்த வைப்புக்கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால் காலங்கடந்த வைப்புத்தொகையில் இருந்து ஒப்பந்தாரருக்கு தொகை ரூ.46657/– திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ1/3544/2019)**

**தீர்மானம் எண்: 1460 அனுமதி வழங்கப்பட்டது.**

**59.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 HPF பகுதியில் HPF Companyக்கு எதிர்புறம் உள்ள பஸ் ஸடாப்பிற்கு பின்புறம் உள்ள நடைபாதையானது தார்சாலையில் இருந்து பீமன் வீடவரை செல்லும் நடைபாதை மிகவும் மோசமடைந்து உள்ளதால் இந்த நடைபாதையைப் பயன்படுத்தும் பொதுமக்களும் மற்றும் இரு சக்கர வாகன ஓட்டிகளும் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள நடைபாதையை சரி செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.80/— இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:— பொது நிதி**

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/4163/2019)**

**தீர்மானம் எண்: 1461 அனுமதி வழங்கப்பட்டது.**

60. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்மறைகளின் படி, இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயலாத்திற்கு ந.க.எண். 2288/2019/பி3 நாள்.26—03—2019ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு அரசிதழில் வெளியிட அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை கொள்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான தொகை ரூ.18,900/— வருவாய் மற்றும் மூல நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்வதை. ஏற்கலாம்.**

**(ந.க.எண்.1601/2017/எச்1)**

**தீர்மானம் எண்: 1462 அனுமதி வழங்கப்பட்டது.**

**61.** இந்நகராட்சியில் தற்சமயம் 3 தண்ணீர் லாரிகள் 30 வருடத்திற்கு மேலான வாகனங்கள் உள்ளன. இதனால் அதிக மேடான சாலைகளில் தண்ணீர் தர இயலவில்லை. மேலும் நகராட்சியில் தற்சமயம் கூடுதலாக தனியார் லாரி வாகனங்கள் மூலம் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது அனைத்து வார்டுகளிலும் குப்பைகளை வீடுகளில் பிரித்து சிறிய வாகனம் மூலம் பெறப்பட்டு நுண் உரம் செயலாக்க மையம் (MCC) யில் உரமாக்கப்படுகிறது. இதனால் “Dumper Placer” குப்பை தொட்டி வாகனம் தற்சமயம் செயல்பாட்டில் இல்லாமல் உள்ளது. எனவே TN 43E1631 Dumper Placer வாகனத்தை மாற்றி 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட Water Tanker Lorry ஆக மாற்றி பயன்படுத்த தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:— குடிநீர் மற்றும் வடிகால் நிதி**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.E4/3613/2019)**

**தீர்மானம் எண்: 1463 அனுமதி வழங்கப்பட்டது.**

**62.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ரேஸ்கோர்ஸ் மைதானத்தை ஒட்டி பஸ்நிலையம் முதல் எட்டின்ஸ் சாலை இணைக்கும் நடை பாதையில் **9** எண்கள் கடைகள் உள்ளன. மேற்படி கடைகளை மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி அகற்றி பஸ்நிலையம் வடக்கு ஏரி சாலையில் அமைக்க உள்ளதால் தரைதளம் அமைத்து கடைகளை மாற்றியமைத்து கடைகளுக்கு வர்ணம் பூசி புதுப்பித்து மின் இணைப்பு வழங்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**5.75** இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:– பொது நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/5935/2019 )**

**தீர்மானம் எண்: 1464 அனுமதி வழங்கப்பட்டது.**

**63.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்மா உணவகம், மெயின்பஜார் குழந்தை ஏசு கோவில் முன்புறம் மற்றும் மாரியம்மன் கோயில் அருகில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் தார் சாலைகளில் வழிந்தோடுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேலும் கழிவுநீர் தார் சாலையில் செல்வதால் பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொது மக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் கால்வாய் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**4.90** இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:– நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/5934/2019 )**

**தீர்மானம் எண்: 1465 அனுமதி வழங்கப்பட்டது.**

**64.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**25**–ல் உள்ள நகராட்சி உருது பள்ளி (Primary School) தற்சமயம் நடநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் கூடுதலாக வகுப்பு அறைகள் கட்டித்தர வட்டார கல்வி அலுவலர், உதகை அவர்களிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே இப்பள்ளி கட்டிடத்தில் கூடுதலாக **3** எண்கள் அறைகள் கட்ட அவசியமானதாகும்.

எனவே கூடுதல் வகுப்பறைகள் கட்ட காலி இடம் தேர்வு செய்யப்பட்டு, ரூ.**40.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 6028/இ5/2019 )**

**தீர்மானம் எண்: 1466 அனுமதி வழங்கப்பட்டது.**

**65.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25—ல் உள்ள நகராட்சி உருது பள்ளி (Primary School) தற்சமயம் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி பள்ளி கட்டிடத்தை சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைக்கவும் பணி மற்றும் மேம்பாட்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மதிப்பிடு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 6029/இ5/2019 )**

**தீர்மானம் எண்: 1467 அனுமதி வழங்கப்பட்டது.**

**66.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் முக்கோணம் பகுதியில் உள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் 20 HP Submerssible Motor Pump – 2 Nos. 12.50 HP Submerssible Motor Pump – 2 Nos. Panel Board Non return ralve – 3 Nos பொருத்தப்பட்டுள்ளது. மேலும் 20 HP Submerssible Motor Pump – 1 Nos k‰W« 12.50 HP Submerssible Motor Pump – 2 Nos (Standby) உள்ளது. இந்நகராட்சியில் ஆட்கள் பற்றாகுறையாக உள்ள காரணத்தால் கழிவு நீரேற்றும் நிலையத்தில் சரிவர கழிவுநீரேற்றும் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட கழிவு நீரேற்றும் நிலையத்தில் தினசரி முறையாக மோட்டார்களை இயக்குவதற்கும், மேலும் Panel board Submerssible Motor Pump. மற்றும் NRV ஆகியவை பழுது ஏற்படும் சமயங்களில் சிறு சிறு பழுது நீக்கம் செய்து (Major பழுதுகள் தவிர) முறையாக தினசரி கழிவு நீரேற்றுவதற்காக ஆண்டு பராமரிப்பிற்காக ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.08.2019 முதல் ஓராண்டுக்கு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3.70/— இலட்சத்திற்கு பணிகளை மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:— நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி.**

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**(இ5/6053/2019)**

**தீர்மானம் எண்: 1468 அனுமதி வழங்கப்பட்டது.**

**67.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குதிரைகள் நகராட்சி சாலைகளில் சுற்றித் திரிவதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. மேலும், பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் போது திடீரென்று குதிரைகள் பாய்ந்து கடிக்க வருகிறது. குதிரைகளை வளர்ப்பவர்கள் குதிரைகளை பட்டியில் அடைத்து வளர்ப்பதில்லை. மாறாக குதிரைகளை திறந்த வெளியில் சாலைகளில் உலாவ விடுகின்றனர்.

நோய்வாய்ப்பட்ட குதிரைகளும் தெருக்களில் ஆங்காங்கே திரிந்து கொண்டிருப்பதால், நோய்வாய்ப்பட்ட குதிரைகளிடமிருந்து பொதுமக்களுக்கு காற்றின் மூலமாக நோய் பரவும் அபாயம் உள்ளது. மேலும் உதகமண்டலம் சுற்றுலாத்தளமாக உள்ளதால் சுற்றுலா பயணிகள் அவர்களது வாகனங்கள் அதிக அளவு நகரப்பகுதிகளில் வரும்பொழுது

குதிரைகளால் போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. மேலும் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் திடீரென குதிரைகள் குறுக்கே செல்வதால் பொதுமக்கள் மிகுந்த பயத்துடன் நாட்புறங்களிலும் சிதறி ஓடுவதால் பலர் காயமடைந்துள்ளனர். உடல் நலக்குறைவால் நோயுற்ற குதிரைகள் பல இறப்பதால் அதன் உரிமையாளர்களுக்கு அவை இறந்த தகவல் தெரியாமல் சாலைகளிலேயே இரண்டு மூன்று நாட்கள் கிடப்பதால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 245ன் கீழ் எந்த ஒரு விலங்கினங்கள் வளர்த்தாலும், வளர்க்கும் இடத்தில் நகராட்சி அனுமதியோடு தான் வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படவில்லை எனில் அவ்விலங்கினங்களை நோய் பரப்பும் விலங்கினமாக கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 274, 275 மற்றும் 276ன் கீழ் அந்த விலங்கினங்களை அப்புறப்படுத்துவதற்கு நகராட்சிக்கு அதிகாரம் உள்ளது. மேலும் பொது சுகாதார சட்டம் 1939 பிரிவு 40, 41, 44 மற்றும் 134 ன்படி நகராட்சியில் உள்ள ஆணையாளர் மற்றும் நகர்நல அலுவலருக்கு அதிகாரம் உள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் பொது சுகாதார சட்டம் 1939ன் கீழ் உதகமண்டலம் நகர பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் உள்ள குதிரை , மாடு, ஆடு மற்றும் நாய் இவற்றை பிடிப்பதற்கு காவல் துறை உதவியுடன் தகுந்த பணியாளர்களைக் கொண்டு காந்தல் முக்கோணம் பகுதியில் நகர நில அளவை ஆவணங்களின்படி கழிவுப்பண்ணை என்ற பதிவினை கொண்ட புல எண். F/2/84 கொண்ட 6.09.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் இவற்றை பாதுகாக்க கால்நடைகளுக்கான நகராட்சி விலங்குகள் பட்டி அமைக்கவும், மேற்படி விலங்குகளின் உரிமையாளர்களின் மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகராட்சி சாலைகளில் போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறாக குதிரைகள் மற்றும் ஏனைய விலங்கினங்கள் சுற்றித்திரிவதால் பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாலும், நோய்வாய்ப்பட்ட விலங்குகளால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதால் காந்தல் முக்கோணம் பகுதியில் நகர நில அளவை ஆவணங்களின்படி கழிவுப்பண்ணை என்ற பதிவினை கொண்ட புல எண். F/2/84 கொண்ட 6.09.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் இவற்றை பாதுகாக்க கால்நடைகளுக்கான நகராட்சி விலங்குகள் பட்டி அமைக்கவும், மேற்படி விலங்குகளின் உரிமையாளர்களின் மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவீனத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.317/2015/எச்2)**

**தீர்மானம் எண்: 1469 அனுமதி வழங்கப்பட்டது.**

**தனி அலுவலர், மற்றும்**
**ஆணையாளர்**
**உதகமண்டலம் நகராட்சி.**